| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திருமதி. ஆய்பொண்ணு<br>க.பெ. திரு.ரெங்கராஜ் | அ.வ.எண்.145/2009 | 13.11.2025 |

<u>1,3,6 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

20) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 7 ல் 2006 ம் ஆண்டு ஜீன் மாதம் கடைசி வாரத்தில் நான் தேங்காய் பறிக்க முற்படும்போது எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அன்றைய தினம் எங்களுக்கும் அஞ்சலை அம்மாளுக்கும் தான் பிரச்சனை ஏற்பட்டது. அப்படியானால் பிரதிவாதிகள் மீது அதற்காக இலால்குடியில் புகார் கொடுத்ததாக எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறியிருந்தால் அது தவறா என்றால் எங்களது இடத்தில் தான் பிரதிவாதிகள் வைத்துள்ளார்கள்.

21) மேற்படி பிரச்சனை 2006 ல் இருந்தே உள்ளது என்றால் சரிதான். 2006 ல் தான் பிரதிவாதிகள் எனது இடத்தை பிரித்து வைத்துக்கொண்டு அதை தர மறுக்கின்றனர் என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரதிவாதிகள் பிரித்து வைத்துள்ள எனது இடத்தை திருப்பி தர கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். வா.சா.ஆ.3 அறிவிப்பில் எனது பெயருடன் இன்னும் 3 பெயர்கள் காட்டப்பட்டு எங்கள் நால்வருக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

22) எனக்கு கிரையம் கொடுத்த A.P. சுப்ரமணியன் 36 செண்ட்டை முதலில் பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டு, அதே நாளில் அதன் பின் எனக்கு 32 செண்ட்டை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 32 செண்ட்டிற்கு என் பெயருக்கு தனிப்பட்டா உள்ளதா என்றால் வழக்கு நிலுவையில்

உள்ளதால் பட்டா பெறவில்லை, இனிமேல் தான் தனிபட்டா பெறவேண்டும்.

23) நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் 2006 ல் எனக்கு பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்ற விபரத்தை எனது பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது முதல்விசாரணை பிரமாணவாக்குமூலம் பக்கம் 4, பத்தி 8 ல் பிரதிவாதி சொத்தில் நான் எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான், அவர்களது சொத்து எனக்கு தேவையில்லை.

24) எனது வழக்கிற்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும், நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் எனக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.213/2006 வழக்கு பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல, அவர்களுக்கு எதிராக நஷ்டஈடு வழக்கு தாக்கல் செய்ய உள்ளேன்.

25) 2006 ல் இருந்து பிரதிவாதிகள் வழக்கு சொத்தை அனுபவித்து வருவதால் தான் அதற்கு நான் நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்ய போவதாக கூறுகிறேனா என்றால் ஆமாம்.